<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, குழித்துறை</u>

சிசி. 967/2022

அரசு தரப்பு சாட்சி : அ. சா. 2

| | |
|---|---|
| பெயர் | : கெலன்மேரி |
| தகப்பனார் பெயர் | : |
| கிராமம் | : |
| தாலுகா | : |
| ஜாதி | : |
| மதம் | : |
| தொழில் | : |
| வயது | : |
| நாள் | : 26.06.2024 |

1873ம் வருடத்திய சாட்சிய சட்டத்தின்படி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்

**<u>முதல் விசாரணை ..</u>**

நான் தற்போது நித்திரவிளை காவல் நிலையத்தில் தலைமை காவலளாராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு சம்பவத்தின் போது நித்திரவிளை காவல் நிலைத்தில் பணிபரிந்த திரு. இன்பராஜ் , உதவி ஆய்வாளர் திரு. ஞானசிகாமணி அவர்களுடைய கையெழுத்துக்கள் எனக்கு நன்கு பரிச்சயம். மேற்படி அதிகாரிகள் பதிவு செய்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 21,09,2022ம் தேதி மதியம் 12,00 மணியளவில் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இன்பராஜ் அவர்கள் நிலைய பொறுப்பில் இருக்கும் சாத்தன்கோட்டை சேர்ந்த கங்காதரன் மகன் விஜயகுமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அந்த புகார் மனுவின் தன்மைக்கேற்ப நித்திரவிளை காவல் நிலைய குற்ற எண். 159/2022, ச/பி 341, 294(பி), 506(2) இதச படி வழக்கு பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த முதல் தகவல் அறிக்கை அசலுடன் புகார் மனுவை இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, குழித்துறை அவர்களுக்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியம், ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ஞானசிகாமணி அவர்கள் பார்வைக்கும் வைத்துள்ளார். உதவி ஆய்வாளர் ஞானசிகாமணி மேற்படி

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 21.09.2022 தேதி மதியம் 01.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று சாட்சிகள் ஜஸ்டின், செல்வன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **அந்த பார்வை மகசர் மற்றும் வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி சாட்சிகள் இருவரையும் சம்பவ இடத்தில் வைத்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றை தினம் சாட்சிகள் விஜயகுமார், சிவகுமரேசன் , விமல் ஆகியோர்களை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. இன்பராஜ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கின் எதிரியை தேடி வந்த நிலையில் 21.09.2022ம் தேதி 16.30 மணியளவில் விரிவிளை சந்திப்பில் வைத்து எதிரியை கைது செய்து நிலையம் கொண்டு வந்த தக்க வழிக் காவல் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளார். பின்னர் 22.09.2022 ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து சாட்சியங்களின் வாக்குமூலங்களிலிருந்தும் சம்பவ இடத்தை பார்வை இட்டதிலிருந்தும் உதவி ஆய்வாளர் அவர்கள் ரகசிய புலன் விசாரணையிலிருந்தும் சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் இவ்வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவு 341, 294(பி), 506(2) இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது இந்த குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பொய்யான தகவலின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒன்று என்றால் சரியல்ல. மேற்படி இவ்வழக்கில் காலதாமதமாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை செல்லத்தக்ககல்ல என்றால் சரியல்ல. சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றும் இது ஒரு பொய் வழக்கு என்றால் சரியல்ல.